FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167279

1. District : கடலூர் மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 11/2025 முத.அ. எண் Date 02.12.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம் Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம் Bharatiya Nagarik Suraksha Sanhita Sections பிரிவுகள்: 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 01.12.2025 Date to : நாள் வரை 01.12.2025
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.45 hrs Time to : நேரம் வரை 23.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.12.2025 Time : நேரம் 12.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time : நேரம் 12.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ. தென்மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார் பதிவாளர் இணை–1 அலுவலகம், விருத்தாசலம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு.கலைச்செல்வி குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : ---- வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் ----
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 02.12.2025 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர், என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் கு.கலைச்செல்வி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர் .பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.A/750/2025, நாள்: 02.12.2025_பொருள்: திடீர் ஆய்வு சோதனை – விருத்தாசலம் சார்பதிவகம் இணை எண்–I – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – ர் மனு சமர்ப்பித்தல்வேண்டி புகா நடவடிக்கை – சம்மந்தமாக.

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..!..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2/12/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: (பெயர்) S.SUNDARAJ
Rank: நிலை ..... No. எண் .....
VACC, Cuddalore

தனித்தாள்

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற.எண்.11/2025 ன் பக்கம் 1ல் வரிசை எண் 7ல் குற்றம்சாட்டப்பட்டவர்களின் முழுமையான விவரங்கள்.

1) திரு. K.ஆனந்தபாபு, உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர், விருத்தாசலம் சார்பதிவகம், இணை எண்–I, கடலூர் மாவட்டம்.

2) திருமதி. G.ஜெகஜோதி, இளநிலை உதவியாளர், விருத்தாசலம் சார்பதிவகம், இணை எண்–I, கடலூர் மாவட்டம்.

3) திரு. N.தண்டபாணி, கேமரா ஆப்பரேட்டர், விருத்தாசலம் சார்பதிவகம், இணை எண்–I, கடலூர் மாவட்டம்.

4) திரு. P.சிங்காரவேல், டேட்டா என்டரி ஆப்பரேட்டர், விருத்தாசலம் சார்பதிவகம், இணை எண்–I, கடலூர் மாவட்டம்.

5) திரு. K.சேகர், அலுவலக உதவியாளர், விருத்தாசலம் சார்பதிவகம், இணை எண்–I, கடலூர் மாவட்டம்.

6) திரு. M.கந்தசாமி, த/பெ. முத்துகுமாரசாமி, ஆவண எழுத்தர், எண்.48, விருத்தாம்பிகை நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

7) திரு. P.பரசுராமன், த/பெ.பரமசிவம், இடைத்தரகர், எண்.280, தெற்கு தெரு, இடைச்சித்தூர் அஞ்சல், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

8) திரு. P.பார்த்திபன், த/பெ.பழனிமுத்து, ஆவண எழுத்தர் உதவியாளர், எண்.74, நடுத் தெரு, குப்பநத்தம் விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

9) திரு. M.ரஞ்சித்குமார், த/பெ.முத்துசாமி, ஆவண எழுத்தர் உதவியாளர், பலையகுடி அஞ்சல், அரியலூர் மாவட்டம்.

21/7/25

கடலூர் ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் நேற்று 01.12.2025 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும்போது கடலூர் மாவட்டம், விருத்தாசலம் சார் பதிவாளர் இணை–1 அலுவலகத்தில், பத்திரப்பதிவுக்காக அலுவலகம் வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அன்றே மாலை சுமார் 4.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் ச.சுந்தரராஜ் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி விருத்தாசலம் இணை–1 சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 7.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு விருத்தாசலம் இணை–1 சார் பதிவாளர் அவர்களுக்கு கொடுக்க உள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் அவர்கள் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.ச.சுந்தரராஜ் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 5.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு வடக்கு தெற்காக செல்லும் கடலூர் – சேலம் சாலையின் கிழக்கு புறமாக அமைந்துள்ள விருத்தாசலம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் அந்த வளாகத்தின் கீழ்தளத்தில் இயங்கி வரும் விருத்தாசலம் இணை–1 சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 7.45 மணிக்கு மேற்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று பிரதான நுழைவு வாயிலை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். மேற்படி அலுவலகத்தின் கீழ்தளத்தில் இயங்கி வரும் விருத்தாசலம் சார் பதிவாளர் அலுவலக இணை–1 அலுவலகத்திற்குள் சென்று, அலுவலக வராண்டாவிற்கு கிழக்கு புற வாயிலின் வழியாக கண்ணாடி சுவர் போட்ட அறையின் கிழக்கில் மேற்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சார் பதிவாளர் அவர்களை விசாரித்தபோது, அவரது பெயர்

2/12/25

K.ஆனந்தபாபு, வயது 40, த/பெ கிருஷ்ணமூர்த்தி, உதவியாளர், மாவட்ட பதிவாளர் தணிக்கை அலுவலகம், சிதம்பரம் என்றும், தற்போது விருத்தாசலம் சார்பதிவாளர் இணை –1 அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்யப்போகும் விவரத்தை அவரிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அங்கிருந்தவர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி விருத்தாசலம் சார்பதிவாளர் இணை –1 அலுவலகமானது ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக கட்டிடத்தின் தரைத்தளத்தில் இயங்கி வருகிறது. இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. பொறுப்பு சார் பதிவாளர் திரு.K.ஆனந்தபாபு அவரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் இருப்பு பதிவேட்டினை கேட்க அவர்கள் அப்பதிவேட்டை ஒப்படைத்தார். அப்பதிவேட்டினை பார்வையிட்டதில் 27.11.2025 க்கு பின்னர் பதிவுகள் எதுவும் இல்லை. பின்னர் பொறுப்பு சார் பதிவாளர் திரு.K.ஆனந்தபாபு அவரது சட்டை பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் ரூ.200/– (200x1) இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க தான் காலை அலுவலகம் வரும்போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் நேற்றைய தேதியில் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருந்ததால் அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கைப்பற்றப்பட்டது. பின்னர், அவரது மேஜையை சோதனை செய்ததில் அதில் பணம் ஏதும் இல்லை. மேற்படி சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.P.சிங்காரவேலு, த/பெ, பெரியசாமி, Data Entry Operator (TCS –ZIGMA) என்று தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.5,600/– (500x9, 200x5, 100x1) இருந்தது. அப்பணம் தொடர்பாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் நேற்றைய தேதியில் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருந்ததால் அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது மேஜையை சோதனை செய்ததில், கைப்பற்றக்கூடிய பணம் ஏதும் இல்லை. மேற்படி ஹாலின் வடமேற்கு திசையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் G.ஜெகஜோதி, இளநிலை உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரது கைப்பையை சோதனை செய்ய அதில் ரூ.4,200/–

2/12

(500x6, 200x4, 100x4) இருந்தது. அப்பணம் தொடர்பாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் நேற்றைய தேதியில் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருந்ததால் அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலின் மேற்குதிசையில் உள்ள கணினி அறையில் இருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் N.தண்டபாணி (வயது 29), த/பெ. நடராஜ் என்றும் தான் கேமரா ஆப்பரேட்டராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3,800/– (500X7, 100X3) பணம் இருந்தது. அப்பணம் தொடர்பாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டில் நேற்றைய தேதியில் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருந்ததால் அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரணை செய்ய சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக பத்திர எழுத்தர்கள் கொடுத்த பணத்தை பதிவறையில் மறைத்து வைத்துள்ளதாக கூறி பதிவறைக்கு அழைத்துச்சென்று ஆவணங்களுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொடுத்தார். அப்பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,47,000/– (500x291, 200x7, 100x1) இருந்தது. மேற்படி பணம் ரூ.1,47,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் P.பரசுராமன் (வயது 37), த/பெ. பரமசிவம் என்றும், தான் இடைத்தரகராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.37,600/– (500x35, 200x100, 100x1) இருந்தது. அப்பணம் தொடர்பாக அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் M.கந்தசாமி (வயது 62), த/பெ. முத்துகுமாரசாமி என்றும், தான் பதிவு செய்யப்பட்ட ஆவண எழுத்தர் என்றும், பதிவு எண் A107/CDM/96 என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,000/– (500x2) இருந்தது. அப்பணம் தொடர்பாக அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் சார் பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைத்துள்ள லஞ்சப்பணமாக இருக்கலாம் என கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் P.பார்த்திபன், வயது 23, த/பெ.பழனிமுத்து என்றும், தான் ஆவண எழுத்தர் திருவரசமூர்த்தி என்பவரிடம் உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.5,600/– (500x11, 100x1) இருந்தது.

2/12/25

மேற்படி பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறாததாலும், மேற்படி பணம் சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் M.ரஞ்சித்குமார், வயது 24, த/பெ.முத்துசாமி என்றும், அவரும் ஆவண எழுத்தர் திருவரசமூர்த்தி என்பவரிடம் உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,000/– (500x1, 200x2, 100x1) இருந்தது. மேற்படி பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறாததாலும், மேற்படி பணம் சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவரது பெயர் K.சேகர் (வயது 56), த/பெ. கலியன் என்றும், தான் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது மணிபர்சில் ரூ.6,000/– (500x6, 200x6, 100x18) பணம் இருந்தது. மேற்படி பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறாததாலும், மேற்படி பணம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.6,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் உதவியாளர் அறையினை சோதனை செய்தபோது அறையின் வடகிழக்கு மூலையில் ரூ.10,900/– (500X21, 200x2) தரையில் கிடந்தது. அப்பணம் குறித்து யாரும் உரிமை கோராததால் மேற்படி பணம் பதிவுக்கு வரும் பொது மக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோரிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.10,900/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வு சோதனையில் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,22,900/– (500x389, 200x127, 100x30) ஆகும். மேலும், விருத்தாசலம் சார் பதிவாளர் இணை–1 அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) இருப்பு பதிவேடு, 2025–ஆம் தொகுதி–II என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடு (2) தொகுதி எண்.27, வருகை பதிவேடு 01.01.2025 முதல் மாவட்டப் பதிவகம், விருத்தாசலம், என்று லேபிள் ஒட்டப்பட்ட பதிவேடுகளை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. நேற்று 01.12.2025ந் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,22,900/–, 1) சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.ஆனந்தபாபு, 2) திருமதி.ஜெகஜோதி, இளநிலை உதவியாளர், 3) தண்டபாணி, கேமரா ஆப்பரேட்டர், 4) சிங்காரவேல், டேட்டா என்டரி ஆப்பரேட்டர், 5) சேகர், அலுவலக உதவியாளர், 6) கந்தசாமி, ஆவண எழுத்தர்,

2/12/25

7) பரசுராமன், இடைத்தரகர், 8) பார்த்திபன், ஆவண எழுத்தர் உதவியாளர், மற்றும் 9) ரஞ்சித்குமார் ஆவண எழுத்தர் உதவியாளர் ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 02.12.2025 ந்தேதி காலை 12.30 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். விருத்தாசலம் சார்பதிவாளர் இணை–1 அலுவலகத்தில் இடைத்தரகர்கள் மற்றும் பத்திர எழுத்தர்களை அலுவலகத்திற்குள் அனுமதித்தது, அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டதற்கு 1) சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.ஆனந்தபாபு, 2) திருமதி.ஜெகஜோதி, இளநிலை உதவியாளர், 3) தண்டபாணி, கேமரா ஆப்பரேட்டர், 4) சிங்காரவேல், டேட்டா என்டரி ஆப்பரேட்டர், 5) சேகர், அலுவலக உதவியாளர் ஆகியோர்கள் பொறுப்பு ஆவார்கள். எனவே மேற்படி அலுவலக ஊழியர்கள் மற்றும் அலுவலக வளாகத்திற்குள் இருந்த 6) கந்தசாமி, ஆவண எழுத்தர், 7) பரசுராமன், இடைத்தரகர், 8) பார்த்திபன், ஆவண எழுத்தர் உதவியாளர், மற்றும் 9) ரஞ்சித்குமார் ஆவண எழுத்தர் உதவியாளர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கடலூர். ஒப்பம் ------ (கு.கலைச்செல்வி) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கடலூர்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 02.12.2025 at 12.30 hours. I registered a case in Cuddalore Vigilance and Anti–Corruption Cr.No.11/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and Section 106 BNSS on 02.12.2025 at 13.00 hours. sd/– xxxx 02.12.2025 (S.SUNDRARAJ), Inspector of Police, V&AC, Cuddalore.

S. SUNDRARAJ
Inspector of Police
V&AC, Cuddalore